විශේෂ මුද්දර
නිකුත් කිරීම

விசேட வெளியீடு

ශ්‍රී ලංකා
இலங்கை

මුද්දර
නිවේදන අංක
முத்திரைச்
செய்தி தாள்
இல.
48

# වෙසක්
# வெசக்

1976. 05. 07

මුද්දර කාර්යාංශය
முத்திரைப் பணியகம்

තැපැල් සහ විදුලි සංදේශ දෙපාර්තමේන්තුව
அஞ்சல் தொலைத் தொடர்புத் திணைக்களம்

මුද්දර නිවේදන අංක: 48

තැපැල් සහ විදුලි සංදේශ
අමාත්‍යාංශය,
ආදිපාද වීදිය,
කොළඹ 1.
1976 මැයි මස 07 දින.

සිද්ධාර්ථ කුමාරෝත්පත්තිය සිදුවී 1976 (මැයි-ජූනි) වෙසක් පුන් පොහෝ දිනට වර්ෂ 2600 ක් පිරීම අනුස්මරණය කිරීම් වස් 1976 මැයි මස 07 වැනි දින අලුත් මුද්දර හයක් නිකුත් කිරීමට ශ්‍රී ලංකා තැපැල් සහ විදුලි සංදේශ දෙපාර්තමේන්තුව තීරණය කර ඇත.

ශ්‍රී ලංකාවේ බහුතර ජනතාව ද, ලොව පුරා විහිදී සිටින ජනකායෙන් 1/5 කොටසකට වැඩි සංඛ්‍යාවක් ද විසින් අදහනු ලබන ආගම වන බුදු දහමේ නිර්මාර්තෘවරයා වූ බුදුරජාණන් වහන්සේ මීට අවුරුදු 2500 කට පමණ පෙර උතුරු ඉන්දියාවේ වැඩ විසූ සේක. ගෝතම යනු උන් වහන්සේගේ ගෝත්‍ර නාමය වූ අතර සිද්ධාර්ථ යනු පුද්ගල නාමය විය. උන්වහන්සේගේ පියාණන් වූ සුද්ධෝදන රජතුමා ඉන්දියාවේ නේපාල ප්‍රාන්තයේ කපිලවස්තු නම් ශාක්‍ය රාජධානිය පාලනය කෙළේය. කෝලිය වංශයේ කුමාරිකාවක වූ මහාමායා දේවිය සුද්ධෝදන රජතුමාගේ මෙහෙසිය වූවාය.

ඉන්දිය වෘක්ෂ ලතාවන් පලු පල්ලවයෙන් පිරි, මලින් හා පලින් බරව, මිනිසුන්, පක්ෂීන් හා සතුන් ද ප්‍රීති ප්‍රමෝදයෙන් උද්දම වූ ක්‍රි:පූ: 623–624 වැන්නෙහි මැයි මාසයේ එළඹි පුන් පොහෝ දින මහාමායා දේවිය එකල පැවති චාරිත්‍රය අනුව දරු ප්‍රසූතිය සඳහා කපිලවස්තුවේ සිට සිය දෙමාපියන්ගේ රාජධානිය වූ දෙව්දහ පුරයට යාමට රජ පෙරහරින් නික්මුනාය. එහෙත් දේවියට සිය ගමන නිම කිරීමට නොහැකි විය. අතරමග ලුම්බිණි නම් උයනෙහි සල්ගස් සෙවනේදී ඇයට පුත්‍රලාභයක් විය. 1976 මැයි පුන් පොහෝ දිනට යෙදෙන්නේ මෙම සිද්ධියෙන් අවුරුදු 2600 ක් පිරීමේ සංවත්සරයයි.

ලුම්බිණිය නැතහොත් එය දැනට හඳුන්වන පරිදි රුම්මින්දේයි, බරණැස් නගරයට සැතපුම් සියයක් උතුරින් හිමෙන් වැසුනු හිමාලය කඳු වැටිය පේනතෙක් මානයේ පිහිටා ඇත. අනාගත බුදුවරයාණන් වහන්සේ වූ සිද්ධාර්ථ කුමාරයාණන් වහන්සේ ජන්ම ලාභය ලද මෙම අනුස්මරණීය ස්ථානය පෙන්නුම් කිරීම සඳහා සිද්ධාර්ථ කුමාරෝත්පත්තිය සිදුවී වර්ෂ 316 කට පසුව අශෝක අධිරාජයා විසින් එහි විශාල ගල්ටැඹක් පිහිටුවන ලදී. එම ටැඹෙහි කොටා ඇති ශිලා ලිපියෙහි මෙසේ සඳහන් වේ. ''හිද බුධෙ ජාතෙ සාක්‍යමුනිති''-ශාක්‍යමුණි බුදු පියාණන් වහන්සේ මෙහි උපන් සේක. මෙම ගල්ටැඹ අද පවා දැකිය හැකිය.

අශෝක අධිරාජයාගේ ධර්ම දූතයන් විසින් ක්‍රි:පූ: තුන්වන සියවසේදී මේ රටේ බුද්ධාගම පිහිටුවනු ලැබූ තැන් පටන් ම මෙරට බෞද්ධ ජනතාව විසින් වෙසක් පුන් පොහෝ දිනට යෙදෙන සිය ආගම් කතුවරයාගේ ජන්ම දිනය ඉතාම උත්කර්ෂවත් අන්දමින් අනුස්මරණය කරනු ලැබේ. ආගමික ශික්ෂණයට රුකුලක් වශයෙන් ශ්‍රී ලංකාවේ පුරාණයේ පටන් ම චිත්‍ර ඇඳීම පැරණි කලාවක් ලෙස භාවිත කළ හෙයින් සිද්ධාර්ථ කුමාරෝත්පත්තිය හා සම්බන්ධ කථා ද ඇත අතීතයේ සිටම චිත්‍රයට නඟා තිබෙන්නට ඇත. චිත්‍රයෙන් සරසා තිබුනේ රජ මාලිගා හා විහාරස්ථානවල බිත්ති පමණක් නොවේ. තවද, ආගමික පෙරහැරවල ගෙනයාම සඳහා හෝ ආගමික දේශකයන් විසින් ඉදිරිපත් කරනු ලබන ආගමික කථා විස්තර කරදීම සඳහා හෝ රෙදිවල අඳින ලද ආගමික චිත්‍ර ද තිබිණ. එම චිත්‍ර ඇඳ තිබූ පුවරු, වස්ත්‍ර ආදිය ගලෙහි මෙන් කලක් පවතින ඒවා නොවූයෙන් එක් වකවානුවක වඩාත් ප්‍රචලිතව තිබූ කලාවකින් අද අපට ඉතිරිවී ඇත්තේ ඉතාම ස්වල්ප කොටසකි.

සිංහල සංස්කෘතියේ නිර්මාණාත්මක කාලපරිච්ඡේදය වූ ක්‍රි:පූ: 3 වන සිය වසත් ක්‍රි:ව: 13 වන සිය වසත් අතර කාලය තුළ ශ්‍රී ලංකාවේ චිත්‍ර මගින් සිද්ධීන් ඉදිරිපත් කිරීමේ කලාව බොහෝ සෙයින් දියුණු විය. ඉන්පසු එළඹි ශත වර්ෂ වලදී දැකිය හැක්කේ කලින් යුගයේ පැවැති නගර හා වෙහෙර විහාර වන ප්‍රවාහයෙන්

වැසිගිය බවයි. ඉක්බිති එම පැරණි චිත්‍රකලා සම්ප්‍රදය අභාවයට ගොස් ඒ වෙනුවට ගැමි චිත්‍ර කලාවක් බිහිවිය. මෙහි විශේෂ ලක්ෂණය වන්නේ සිත් ගන්නා සුළු වර්ණ සංයෝජන ක්‍රම හා සැරසිලි මෝස්තරත් ය. දහඅට වන සිය වසෙහි කීර්ති ශ්‍රී රාජසිංහ රජ සමයේ චිත්‍රකලා වෙහි පුණරුදයක් ඇති විය. දැන් ඉදිරිපත් කරනු ලබන මුද්දර කට්ටලය මෙම කාලපරිච්ඡේදයේ අඳින ලද චිත්‍ර වලින් සමන්විත වේ.

ශ්‍රී ලංකාවේ මධ්‍යම පළාතේ මාතලේ දිස්ත්‍රික්කයේ පිහිටි දඹව විහාරය නමින් හඳුන්වනු ලබන විහාරස්ථාන යක ඇඳ ඇති දහඅට වෙනි සියවසට අයත් බිතුසිතුවම් වලින් උපුටා ගන්නා ලද්ව රාමු හයකින් සමන්විත, ප්‍රතිසංධියේ පටන් උත්පත්තිය දක්වා වූ සිද්ධාර්ථ කුමාරයාණන් වහන්සේගේ උත්පත්ති කථාව මෙම මුද්දර පෙළින් පිළිබිඹු කෙරේ. මෙම චිත්‍ර ඇඳ ඇති ප්‍රතිමා මන්දිරය වනාහි ටැම් පිට විහාරයක් එනම්, කුළුණු මත තැනූ සම සතරැස් නිර්මාණයක් වන අතර කීර්ති ශ්‍රී රාජසිංහ රජතුමාගේ රාජ්‍ය කාලය තුළ ගොඩ නඟන ලද්දකැයි කියනු ලැබේ. මෙම විහාරයේ ඇඳි චිත්‍ර නිලගම සිත්තර පරම්පරාවට අයත් කෘතියක් ලෙස විශ්වාස කෙරේ. එසේ වුවද, නිලගම සිත්තරුන් විසින් වෙනත් ස්ථානවල කර ඇති චිත්‍රවලට වඩා මේවා බෙහෙවින් ම වෙනස්ය. සිද්ධාර්ථ චරිතය නිරූපනය කරන මනහර චිත්‍ර රැසක් ම මෙහිදී දැකගත හැකිය. මෙහි වර්ණ සංයෝජන ක්‍රමය වෙනත් ස්ථානවල ඇති ක්‍රමවලට බොහෝ සෙයින්ම සමාන නමුදු ගැලපීම් අතින් තරමක් වෙනස්ය. සාමාන්‍ය උඩරට චිත්‍ර න්‍යායට අනුකූලව කර ඇතත් ගැළපීම හා විෂයය පිළිබඳ ඇතැම් විස්තර අතින් මෙම චිත්‍ර විශේෂ අසාමාන්‍ය ලක්ෂණයක් පිළිබිඹු කරයි. සාමාන්‍ය උඩරට ශෛලියෙන් පැහැදිලිවම බැහැරවීමක් බව පෙනේ. මෙම චිත්‍ර විහාරයේ ඇතුළත භිත්තිවල පින්තාරු කර තිබේ.

සම්ප්‍රදයික විස්තරවලට අනුව, (ස්වප්නයකදී) සිද්ධාර්ථ කුමර තෙමේ කපිලවස්තුවේ සුද්ධෝදන රජතුමාගේ අග මෙහෙසිය වූ මහාමායා දේවියගේ කුසෙහි පිළිසිඳ ගත්තේය. දරු ගැබක් පිළිසිඳ

ගත් බව දේවිය විසින් වහාම රජතුමාට දන්වන ලදුව රජතුමා විගසම නැකැත් කරුවන් ගෙන්වා ගුණාගුණ විමසීය. දේවියට, පතළ වූ කීර්තියකින් හෙබි පින්වත් දරුවෙකු ලැබෙන බවට නැකැත්කරුවෝ අනාවැකි පළ කළහ. එතැන් පටන් රජතුමා හා දේවිය පුණ්‍ය ක්‍රියාවන්හි යෙදෙමින් ධාර්මික ජීවිතයක් ගත කළහ. ප්‍රසූති කාලය ලඟාවත්ම තම ඥාති සමූහයා බැහැ දැකීමට යාමට මෙහෙසිය සිය අදහස පළකර සිටියෙන් වහාම ඊට සිය අනුමැතිය දුන් රජතුමා ඒ සඳහා අවශ්‍ය සෑම දෙයක්ම පිළියෙල කරවා දුන්නේය. එහෙත් රජ මෙහෙසියට නිමකළ හැකි වූයේ සිය ගමනින් අඩක් පමණකි. ලුම්බිණි නම් උද්‍යානයේදී බලාපොරොත්තු රහිත අවස්ථාවක ප්‍රසව වේදනා හට ගෙන පුත්‍ර ලාභයක් ලැබී, එම දරුවාට පසුව සිද්ධාර්ථයයි නම් කරනු ලැබීය.

නිකුත් කරනු ලබන මුද්දර පිළිබඳ විස්තර මෙසේය:

මුද්දර අංක 1: දෙව්ලොවින් චුත වූ සිද්ධාර්ථ කුමරු නිද්‍රා සුවයෙන් පසුවන දේවියගේ කුසට සුදු ඇත් පැටවෙකු ලෙසින් පිවිසීම.

මුද්දර අංක 2: රජතුමා නක්ෂත්‍රාචාර්යයන්ගෙන් ගුණාගුණ විමසීම.

මුද්දර අංක 3: රජතුමා නක්ෂත්‍රාචාරීන්ට රාජකීය කැවිලි පෙවිලිවලින් සංග්‍රහ කිරීම.

මුද්දර අංක 4: දෝලාවක වඩා හිඳුවනු ලැබූ රජ මෙහෙසිය රජ පෙරහරින් සිය මව් පියන් වෙත කැඳවා ගෙන යාම.

මුද්දර අංක 5: රජ පෙරහරෙහි ගමන් ගන්නා රාජ්‍ය නිලධාරීන්, කුඩ කොඩි සේසත් දරන්නන්, ගීත වාදිතයන් හා නටමින් බෙර වයන්නන්.

මුද්දර අංක 6: ලුම්බිණි උයනේදී දේවියට පුත්‍ර ලාභයක් ලැබීම. පරිවාර කාන්තාවන්ද සහිතව තිරයට මුවාවී සිටින දේවිය.

(ශ්‍රී ලංකා පුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුවේ අනුග්‍රහයෙනි)

## කාර්මික විස්තර

| | |
|---|---|
| වර්ගය | : රු. 5/-, රු. 2/25, රු. 2/-, රු. 1/50, ශත 10 සහ ශත 05 |
| සැළසුම්කරු | : පී. වනිගතුංග |
| වර්ණ | : මැජෙන්ටා, කහ, නිලට හුරු කොල, කළු හා විශේෂ නිල |
| හැඩය | : තිරස් |
| නිකුත් කරන දිනය | : 1976. 05. 07 |
| ප්‍රමාණය | : මි.මී. 28.5 x 48 |
| මුද්‍රණකරුවෝ | : සිමාසහිත ටොපැන් මුද්‍රණ සමාගම, ජපානය |
| මුද්‍රණ ක්‍රමය | : අනුකෘත (ඕෆ්සෙට්) |
| පත් සකැස්ම | : මුද්දර 100 බැගින් |
| භාවිත කඩදාසි | : එක්පසෙක ආලේපිත කඩදාසි |
| මැලියම් | : සර්ම කලාපිය දේශගුණයට ගැල පෙන ඇලෙන සුළු විශේෂ මැලියම් |

## නිල මුල් දින කවර

නිල මුල් දින කවරයක් මුද්දර කාර්යාංශය මගින් නිකුත් කෙරෙන අතර එය විශේෂ අත්දින මුද්‍රාවකින් දින මුද්‍රා තැබීමට කටයුතු සළසා ඇත.

## විකිණීමේ කොන්දේසි

මුද්දර සහ මුල් දින කවර සැපයීම සඳහා වූ ඇණවුම්, මුද්දර කාර්යාංශයේ අධ්‍යක්ෂට මාරු කළ හැකි ලෙස ලියන ලද තැපැල් ඇණවුම්, මුදල් ඇණවුම් හෝ චෙක්පත් සමග "කොළඹ 1, සෙලින්කෝ මන්දිරයේ, සිව්වැනි මහලේ, මුද්දර කාර්යාංශයේ අධ්‍යක්ෂ" යන ලිපිනයට සම්පූර්ණ විස්තර සහිතව එවිය යුතුය.

## முத்திரைச் செய்தித்தாள் இல. 48.

அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சு,
டியூக் வீதி,
கொழும்பு 1,
இலங்கை.
1976.05.07.

இளவரசர் சித்தார்த்தரது (பின்னர் கௌதம பௌத்தர் என அழைக்கப்பட்டவர்) 2600 ஆவது ஆண்டு பிறந்த நாள் எதிர்வரும் வைகாசி விசாக முழுமதி தினத்தில் (1976 மே - யூன்) வருகிறது. இதனை நினைவு கூரு முகமாக இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்புத் திணைக்களம் ஆறு முத்திரைகளை 1976, மே 7 ஆம் திகதி வெளியிடுவதற்கு முடிவு செய்துள்ளது.

இலங்கை வாழ் மக்களில் மிகப் பெரும்பான்மையினரும், அகில உலக மக்களில் ஐந்தில் ஒரு பகுதிக்கு மேற்பட்டவர்களும் பௌத்த சமயத்தை அனுஷ்டிக்கிறார்கள். பௌத்த சமயத்தின் சிருஷ்டி கர்த்தாவான பௌத்தர் இன்றைக்கு ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்னர் வட இந்தியாவில் வாழ்ந்தவராவார். அவரது தந்தையாரான சுத்தோத்தன மன்னன் இந்தியாவின் நேபாள எல்லைப்புறத்தைச் சேர்ந்த கபிலவஸ்துவின் சாக்கியாஸ் பரம்பரையினர் வாழ்ந்த பிரதேசத்தை ஆண்டு வந்தான். கோலியப் பிரதேசத்து இளவரசியான மகமாயாதேவி சுதோத்தன மன்னனின் பட்டத்து ராணியாக விளங்கினாள்.

கி.மு. 623 - 24 வரையான ஆண்டுக் காலமது. வளமார்ந்த இந்திய நாடு பசுமை மயமாக தளிர்களும், இலைகளும், மலர்களும், பழங்களுமாகப் பூத்துக்குலுங்கும் வனப்பான காலமது; மிருகங்கள், மனிதர்கள் என்ற வேறுபாடு இல்லாது எல்லா உயிரினங்களும் குதூகலித்து, காதல் களிப்புடன் மகிழ்ந்து வாழ்ந்த வசந்த காலமது. ரம்மியமான அந்த வசந்த காலத்து வைகாசிப் பூரணைத் தினத்தில், அந்தக் காலத்து நடைமுறைக்கு இணங்க, மகமாயாதேவி அரசி மகவுப்பேற்றுக்காக கபிலவஸ்து ராசதானியிலிருந்து தனது பிறந்தகமான தேவதத்தைக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். நிறை மாதக் கர்ப்பிணியான இராணி மகமாயாதேவி தேவதத்தையைச் சென்றடைவதற்கு முன்னரே, இடைவழியில், குளுமையும் கனப்பும் மிகுந்த லும்பினித் தோப்பினிலே பிரசவ வேதனை காணவே, அவள், அங்கு பூத்துக்குலுங்கும் சிவலிங்கப் புளிய மரத்தின் நிழலில் அழகிய மகவு ஒன்றைப் பெற்றெடுத்தாள். இந்தச் சரித்திரப் பிரசித்திபெற்ற, தெய்வீகச் சிறப்புடைய சம்பவத்தின் 2600 ஆவது ஆண்டு தினத்தைக் குறிப்பதே இவ்வருடத்து வைகாசி விசாகப் பூரணையாகும்.

இப்போது ருமிண்டி என்று அழைக்கப்படும் லும்பினியானது, பனாரிஸிலிருந்து வடக்கே சுமார் நூறு மைல் தொலையில் உள்ளது. அங்கு நின்று பார்த்தால் வெண்பனி மூடி வானத்தின் முகட்டைக் கிழித்துக் கொண்டுகம்பீரமாக நிற்கும் இமாலய மலைச் சிகரத்தின் எழிலை கண்டு ரசிக்க முடியும். புத்தர் என்றாகிய சன்மார்க்கத் தூதரான இள

வரசர் சித்தார்த்தர் பிறந்த நினைவழியாத தனிச் சிறப்புடன் திகழும் அந்த லும்பினியில், அவர் பிறந்த 316 வருடங்களின் பின்னர், அசோகச் சக்கரவர்த்தி கல்லினால் செதுக்கப்பட்ட நினைவுத் தூண் ஒன்றை நிறுவினார். அந்த நினைவு ஸ்தூபியில், சாக்கிய குலத்தினரின் ஆன்ம குரவர் இங்குதான் பிறந்தார் என்ற பொருள்படும் ''ஹித்த புத்தே ஜாதே சக்யாமுனிதி'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த நினைவு ஸ்தூபியை இப்பொழுதும் காணலாம்.

கிறிஸ்துவுக்கு முன் 3 ஆம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தியின் தூதுவர்கள், இந்நாட்டில் பௌத்த சமயத்தை பரப்பி அறிமுகம் செய்த நாள்தொட்டு இந்நாள் வரை, பௌத்தர்கள், தமது சமயத் தலைவரின் பிறந்த நாளான, விசாக (வெசாக்) பூரணை தினத்தை மிளிர்ச்சியுடன் சிறப்புறக் கொண்டாடி வருகின்றார்கள்.

சமயத்தைப் போதித்துப் பரப்பும் நோக்குடன், இளவரசர் சித்தார்த்தரது பிறந்த இடத்துடன் சம்பந்தப்பட்ட கதைகளை வண்ண வண்ண ஓவியங்களாக வரைவது, இலங்கையில் அந்தக் காலத்தின் பண்டைய கலைகளில் பிரபலமடைந்த ஒன்றாக விளங்கியிருக்க வேண்டும் என்பது தெளிவு. அரண்மனைகளிலும், வழிபாட்டு ஸ்தலங்களிலும் மட்டும் புத்தரின் வாழ்க்கைக் கதைகள் ஓவியங்களாகத் தீட்டப்படவில்லை. சமயப் பெருவிழாக்களின் போது எடுத்துச் செல்லும்பொருட்டும், சமயப் போதகர்கள் தாம் கூறும் கதைகளை மக்களுக்கு இலகுவில் விளங்கச்செய்யும் பொருட்டும் புனித கதைகள் துணிகளிலும் ஓவியங்களாகச் சித்திரிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு எழில் வண்ண ஓவியங்கள் வரையப்பட்ட துணிகளும், ஏனைய பொருள்களும் கல்லைப் போன்று கெட்டியாக நீண்ட காலத்திற்குப் பாவிக்கக் கூடிய தன்மை இல்லாதவையாக இருந்த காரணத்தால், அவற்றில் மிகச் சிலவே இப்போது எஞ்சி எமது காலத்தவர் பார்வைக்கு உள்ளது.

சிங்கள கலாசாரத்தின் ஆக்க பூர்வமான காலமாக விளங்கிய காலத்தில் - அதாவது கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.மு. 13 ஆம் நூற்றாண்டு வரையான காலத்தில் ஓவியக்கலை தனிச் சிறப்புற்று விளங்கியது என்பதற்கு பல சான்றுகள் இன்று முள. அச்சரித்திர காலத்தின் பின்னர் வந்த காலத்தில், பண்டைய நகரங்களும், வழிபாட்டு ஸ்தலங்களும் காடார்ந்து போயின. இதன் பயனாக, பண்டைய ஓவியக்கலைப் பாரம்பரியம் மறைந் தொழிந்து போயிற்று; கண்ணைக் கவரும் வர்ண உருவங்களையும், அலங்கார வடிவமைப்புகளையும் தீட்டுவதையே மையமாகக் கொண்டு விளங்கும் நாட்டார் ஓவியக்கலை பரணமிக்கத் தொடங்கியது. 18 ஆம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னரது ஆட்சிக் காலத்தில் நம் நாட்டு ஓவியக் கலைக்கு புத்துயிர் அளிக்கப்பட்டது. அக்காலத்து அழகுறு ஓவியங்களின் பிரதிமைகளே இப்போது வெளியிடப்படும் முத்திரைகளை அலங்கரிக்கின்றன.

இந்த முத்திரைகளை அலங்கரிக்கும் ஓவியங்கள், இலங்கையின் மத்திய மாகாணத்தில் அமைந்த மாத்தளை மாவட்டத்தில் உள்ள தம்பல என்றழைக்கப்படும் விகாரையில் தீட்டப்பட்டிருக்கும் சுவரோவியங்களில் இருந்தே படி

யெடுக்கப்பட்டன. இளவரசர் சித்தார்த்தர் அவரது அன்னையாரின் வயிற்றில் கருக்கொண்டது முதல் லும்பினி என்னும் புண்ணிய ஸ்தலத்தில் தெய்வக் குழந்தையாக வந்துதித்தது வரையுள்ள ஆறு சம்பவங்களை இந்த முத்திரைகள் சித்தரிக்கின்றன. இங்குள்ள ஓவியங்களின் முன்னணிப் படலமானது, கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னரது ஆட்சிக் காலத்தில் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் (தம்மித்த விகாரையின்) தூண்களில் தீட்டப்பட்டுள்ள சற்சதுர வடிவமைப்பாகும். இந்த நீர் வர்ண ஓவியங்கள் சித்தாராஸ் என்று அழைக்கப்படும் ஓவியர் குலத்தைச் சேர்ந்த, நிலாகம குடும்பத்தினரின் படைப்புகள் என்று கருதப்படுகின்றன. எனினும், ஏனைய இடங்களில் காணப்படும் நிலாகம குடும்பத்தினரின் ஓவியங்களிலிருந்து இவை வேறுபட்டவையாக உள்ளன.

இளவரசர் சித்தார்த்தரது வாழ்க்கையை பிரதிபலிக்கும் மிகச் சிறந்த வர்ண ஓவிய வரிசைகளில் ஒன்றே இங்கு காணப்படுகிறது. இதில் இருக்கும் வர்ண அமைப்பு அனேகமாக, ஏனைய ஓவியங்களில் உள்ளதுபோலவே இருப்பினுங்கூட, உருவமைப்பு அடிப்படை வேறுபட்டதாகும். இது வழமையான கண்டிய ஓவியப் பாங்கிலேயே தீட்டப்பட்டுள்ளது, ஆனால் சில நுட்பமான அமைப்புக் கூறுகளும், இந்த ஓவிய வரிசையைக் கண்கவரும், எழிலார்ந்த குளுமைத் தன்மையுடையதாக்கி, ஏனையவற்றிலிருந்து விசேஷமாக வேறுபடுத்தி நிற்கின்றன. இதனால் இந்த ஓவியங்கள், வழமையான கண்டிய ஓவிய மரபிலிருந்தும் சற்றுவிடுபட்டு சிறப்புடையனவாக மிளிர்கின்றன. இங்குள்ள ஓவியங்கள் விகாரையின் உட்பிரகாரச் சுவர்களில் தீட்டப்பட்டிருக்கின்றன.

பரம்பரை பரம்பரையாக வழங்கிவரும் கதைகளின்படி, பிற்காலத்தில் புத்தராக மாறிய இளவரசர் சித்தார்த்தர் கபிலவஸ்து வேந்தன் சுத்தோதனனின் பட்டத்து ராணியான மகமாயாதேவி அரசி கண்ட ஒரு கனவின் மூலம், அவரது வயிற்றில் கருக்கொண்டதாகக் கூறப்படுகிறது. அரசி மாயாதேவி கர்ப்பமுற்றதும் உடனடியாக மன்னருக்கு அறிவிக்கப்பட்டது. மன்னன் சோதிடர்களை வரவழைத்து கனவு பற்றியும், மாயாதேவி கர்ப்பமுற்றிருப்பது பற்றியும் ஆலோசனை கேட்டான். இது பற்றி ஒன்றுகூடி ஆராய்ந்த சோதிட விற்பன்னர்கள், பிற்காலத்தில் கீர்த்தியும், நற்புகழும் பெற்றிலங்கக் கூடிய, சன்மார்க்க அறிவொளிச் சுடராக விளங்கக்கூடிய புத்திரன் ஒருவன் அரசருக்குக் கிடைக்கவிருப்பதாக ஆரூடம் கூறினர்கள். மகப்பேற்றுக் காலம் அண்மித்ததும், மாயாதேவி அரசி தனது பெற்றோர், உறவினரிடம் செல்லவிரும்பி, தனது மனக்கிடக்கையை அரசனிடம் வெளியிட்டாள். அரசனும் அதற்குச் சம்மதம் தெரிவித்து அதற்கான ஏற்பாடுகள் யாவற்றையும்செய்து கொடுக்கலானன். ஆனல் மாயாதேவி தமது பயணத்தின் பாதித்தூரம் சென்றதும், லும்பினி என்றழைக்கப்படும் தோப்பினருகே நடந்து கொண்டிருக்கும்போது எதிர்பாராத விதமாக பிரசவ வேதனை ஏற்படவே, அரசி அங்கு ஒரு அழகிய, தெய்வீக ஒளிவீசும் புத்திரன் ஒருவனைப் பெற்றெடுத்தாள்.

**முத்திரைகளின் விவரம் வருமாறு:—**

முத்திரை இல. *1* — மோட்ச உலகத்தில் இருந்து வந்திறங்கிய இளவரசர் சித்தார்த்தர், வெள்ளைநிற யானையின் உருவத்தில், துயில் கொண்டிருந்த அரசியின் கர்ப்பத்தில் சேர்தல்.

முத்திரை இல. *2* — அரசன் சோதிடர்களை அழைத்து ஆலோசனை கேட்கும் காட்சி.

முத்திரை இல. *3* — அரசன், சோதிடர்களை ராஜமரியாதைகள் செய்து உபசரிக்கும் காட்சி.

முத்திரை இல. *4* — மகமாயாதேவி அரசி பல்லக்கில் இருத்தப்பட்டு அரச பவனியாகத் தமது பெற்ருேரின் இடத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிருர்.

முத்திரை இல. *5* — அரசபவனியில் செல்லும் ராஜாங்க அதிகாரிகள், அரச வரிசைகள், விருதுகள் ஏந்திச் செல்வோர், மேள வாத்தியக்காரர், நடனக்காரர் ஆகியோரை சித்தரிக்கும் ஓவியம்.

முத்திரை இல. *6* — மாயாதேவி அரசி லும்பினித் தோப்பில் புத்திரனைப் பெற்றெடுத்தல். அரசி தனது தோழியர்கள், உதவியாளர்களுடன் திரைக்குப் பின்ஞல் காணப்படுகிருர்.

## தொழினுப்ப விவரங்கள்

இனப்பெறுமதி : ரூபா *5/-*, ரூபா *2/25*, ரூபா *2/-*, ரூபா *1-50*, *10* சதம், *05* சதம்.

வடிவமைப்பாளர் : பி. வனிகத்துங்க.

நிறங்கள் : ஒண்சிவப்பு, மஞ்சள், நீலம், கறுப்பு, விசேட நீலம்.

வடிவமைப்பு : செங்குத்தான

வழங்கும் திகதி : *1976.05.07*

அளவு : *28.5* மி.மீ. × *48* மி.மீ. (துளைக்குத்துளை)

அச்சாளர்கள் : தொப்பான் பிரிண்டிங் கோ, லிமிரெட், ஜப்பான்.

அச்சிடும் முறை : அழுத்தப்பட்ட உருளை மீது மை தடவி எதிர்ப்படியாக எடுக்கப் படும் கல்லச்சு முறை.

தாளமைப்பு : தாளொன்றுக்கு 100 முத்திரைகள்.

கடதாசி : ஒரு பக்கம் சாயம் தோய்ந்த கடதாசி — 104.7 ஜீ/எம்.

பசை : உஷ்ண வலய சுவாத்தியத்துக்குகந்த விசேட பசை.

## முதல் நாள் உறைச் சேவை

விசேடமாக வரையப்பட்ட முதல் நாள் உறையை பணியகம் வழங்கும். அத்துடன் உறையில் விசேட இரத்துச் செய்வதற்கும் ஒழுங்குகள் செய்யப்படும்.

## விற்பனை நிபந்தனைகள்

புதிய முத்திரைகள், முதல் நாள் உறைகள் ஆகிய வற்றை வழங்குவதற்கான கட்டளைகள், முழு விவரங் களுடன் பணிப்பாளர், முத்திரைப் பணியகம், 4 வது மாடி, சிலிங்கோ மாளிகை, கொழும்பு 1 என முகவரியிடப் பட்டு அனுப்பப்படல் வேண்டும். இத்துடன் முத்திரைப் பணிப்பாளருக்குச் செலுத்தப்படற்பாலதான தபால் கட் டளை, காசுக்கட்டளை அல்லது காசோலை இணைக்கப்பட்டிருத் தல் வேண்டும்.